அனுப்புநர்

ஆணையர்,
நில அளவை (ம) நில வரித்திட்ட
ஆணையரகம்,
சர்வே ஹவுஸ்,
சேப்பாக்கம்,
சென்னை-5.

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்
அலுவலகம்.
2. அனைத்து மாவட்ட வருவாய்
அலுவலர்கள்.
3. இணை இயக்குநர்,
மத்திய நில அளவை அலுவலகம்,
சென்னை-5.
4. அனைத்து மாவட்ட உதவி
இயக்குநர்கள், மாவட்ட நில அளவை
அலுவலகம்.
5. உதவி ஆணையர், தமிழ்நாடு
ஆவணக்காப்பகம், எழும்பூர்,
சென்னை-8.

C01885

ந.க. ண3 /40472 /15 (நி.அ) நாள். 23 . 12 .15

அய்யா,

பொருள்:- வழக்கு - தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய வழக்கு எண். 42424/விசாரணை/A/2014 - ஆணையில் நில அளவை (ம) நில வரித்திட்ட ஆவணங்கள் எந்தெந்த அலுவலகங்களில் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்குவது - குறித்து.

பார்வை:- தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய வழக்கு எண்.42424/ விசாரணை/A/2014, ஆணை நாள். 28.9.15.

****************

பார்வையில் காணும் தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய வழக்கு எண்.42424/விசாரணை/A/2014, மனுதாரர் திரு.பா.பெ. இராசு என்பவரது மனு தொடர்பான விசாரணையின் 28.9.15 நாளிட்ட தீர்ப்பாணையில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் சட்ட பிரிவுகளின் கீழ் நில உடமை ஆவணங்கள் கோரும் விண்ணப்பதாரர்களை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மாநில ஆவண காப்பகத்திற்கும் மத்திய நில அளவை அலுவலகத்திற்கும் அலையவிடும் நிலை தற்போதுள்ளது எனவும், நில அளவை ஆவணங்கள் எந்தெந்த அலுவலகங்களில் பராமரிக்கப்படுகிறது என்கிற தெளிவுரையை மீண்டும் சம்மந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களுக்கும் தெரிவித்து அதன் நகலினை தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நில அளவை (ம) நில வரித்திட்ட ஆவணங்கள் எந்தெந்த அலுவலகங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும், அந்த அலுவலகங்களின் பொது தகவல் அலுவலர்/ மேல் முறையீட்டு அலுவலர் பற்றிய விபரங்கள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது :-

| வ. எண். | ஆவணத்தின் பெயர் | பாதுகாக்கப் - படும் அலுவலகம். | பொது தகவல் அலுவலர். | மேல் முறையீட்டு அலுவலர். |
|---|---|---|---|---|
| 1. | நில அளவை பதிவு மேம்பாட்டுத்திட்டப்பணிக்கு முன்புள்ள பழைய நில அளவை புலப்படச்சுவடிகள். | மாவட்டாட்சியர் அலுவலகம். | மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர். |
| 2. | பழைய செட்டில்மெண்ட் பதிவேடு (Old Settlement Register -- O.S.R) | மாவட்டாட்சியர் அலுவலகம். | மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர். |
| 3. | அச்சிடப்பட்டமறு நிலவரித் திட்ட செட்டில்மெண்ட் 'அ' ( R.S.R) பதிவேடுகள் | மாவட்டாட்சியர் அலுவலகம். | மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர். |
| 4. | நிலவரித்திட்ட அலுவலர் அலுவலக வழக்கு கோப்புகள் | மாவட்டாட்சியர் அலுவலகம். | மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர். |
| 5. | நிலவரித்திட்ட அலுவலகத்தில் தயாரிக்கப் பட்ட நிலப்பதிவேடு நகல் (S.L.R. Copies) | மாவட்டாட்சியர் அலுவலகம். | மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர். |
| 6. | நகர நில அளவை மூல ஆவணங்கள். | மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை. | இணை இயக்குநர் மத்தியநிலஅளவை அலுவலகம், சென்னை. |
| 7. | நில உடமை மேம்பாட்டுத் திட்ட மூல ஆவணங்கள் | தமிழ்நாடு ஆவண காப்பகம், எழும்பூர் சென்னை-8. | உதவி ஆணையர் | ஆணையர் |
| 8. | நிலஉடமைப்பதிவு மேம்பாட்டு திட்ட 'அ'பதிவேடு (ம) நத்தம் அடங்கல். | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர். |
| 9. | நில உடமைப்பதிவு மேம்பாட்டு திட்ட சிட்டா (ம) நத்தம் சிட்டா | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் | தலைமையிடத்து துணை | வட்டாட்சியர். |

| | | | | |
|---|---|---|---|---|
| 0. | நில உடமைப்பதிவு மேம்பாட்டு திட்ட கிராமப்படங்கள் | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம் | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 1. | நிலஉடமைப்பதிவு மேம்பாட்டு திட்ட புலப்படச்சுவடி (ம) நத்தம் புலப்படச்சுவடி | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர் |
| 12. | நத்தம் மூல ஆவணங்கள். (புலப்படம்). | தமிழ்நாடு ஆவண காப்பகம், எழும்பூர் சென்னை-8. | உதவி ஆணையர் | ஆணையர் |
| 13. | நகர அளவை பிளாக் வரைபடங்கள் (ம) நிலப்பதிவேடு | சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகம். | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | வட்டாட்சியர். |
| 14. | பைமாஷ் ஆவணங்கள், நத்தம் நில வரித்திட்ட ஆவணங்கள், இனாம் பதிவேடுகள், கிராம பழைய 'அ' பதிவேடுகள் (ம) இனாம் ஒழிப்பு சட்ட ஆவணங்கள் | மாவட்டாட்சியர் அலுவலகம். | மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) | மாவட்ட வருவாய் அலுவலர். |
| 15 | கிராம வரைபடங்கள் (விற்பனை பிரதிகள்) | உதவி இயக்குநர் சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | தொழில் நுட்ப மேலாளர். சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம)உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | உதவி இயக்குநர். மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) இணை இயக்குநர் மத்தியநில அளவை அலுவலகம், சென்னை. |
| 16. | வட்ட வரைபடங்கள் (விற்பனை பிரதிகள்) | உதவி இயக்குநர் சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை(ம) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | தொழில் நுட்ப மேலாளர். சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம)உதவி இயக்குநர் (வரைபடம்) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | உதவி இயக்குநர். மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) இணை இயக்குநர் மத்தியநில அளவை அலுவலகம், சென்னை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 17. | மாவட்ட வரைபடங்கள் (விற்பனை பிரதிகள்) | உதவி இயக்குநர் சம்மந்தப்பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | தொழில் நுட்ப மேலாளர் சம்மந்த பட்ட மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம)உதவி யக்குநர் (வரைபடம்) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை. | உதவி இயக்குநர் மாவட்ட நில அளவை பதிவேடுகள் துறை (ம)உதவிஇயக்குநர் (வரைபடம்) மத்திய நில அளவை அலுவலகம், சென்னை |

மேலும், பட்டியலில் குறிப்பிட்டுள்ள மேற்படி ஆவணங்களின் நகல்கள் கோரி மனுக்கள் பெறப்பட்டால் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து மனுதாரர்கள் கோரும் ஆவணங்களின் நகல்கள் வழங்கும்படி சம்மந்தப்பட்ட பொது தகவல் அலுவலர்கள்/ மேல் முறையீட்டு அலுவலர்கள் ஆகியோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இனி வருங்காலங்களில் தகவல் பெறும் உரிமைச்சட்டப் பிரிவுகளில் பெறப்படும் மனுக்களின் மீது நடவடிக்கை எடுப்பதில், மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் எனவும், நில உரிமை ஆவணங்களின் விபரம் கோரும் மனுதாரர்களின் மனுக்கள் சரிவர பரிசீலிக்காமல், அவர்களை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து மாநில ஆவண காப்பகத்திற்கும், மத்திய நில அளவை அலுவலகத்திற்கும் அலையவிடக்கூடாது எனவும், மனுதாரர்களுக்கு உரிய விபரங்களை சரியான உரிய அலுவலகம் மூலம் பெற்றுக் கொள்ளும் வகையில் இப்பட்டியலில் கண்டுள்ள விபரங்களின்படி அறிவிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒம்)எஸ்.இராகவன்,
நில அளவை (ம) நில வரித்திட்ட
இயக்குநருக்காக.

நகல்:-
மாநில தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),
எல்டாம்ஸ் சாலை சந்திப்பு,தேனாம்பேட்டை, சென்னை-18.
(தகவலுக்கு அனுப்பப்படுகிறது).

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது. 23/12/15

பொது தகவல் அலுவலர்/
இணை இயக்குநர் (நிர்வாகம்)(பொ)